TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108532

1. District மாவட்டம் : திருப்பூர் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 3/2022/AC/TPR Date: நாள் 01.02.2022

2. (i) Act சட்டம்: The prevention of corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 27.01.2022 Date to நாள் வரை : 18.30 hrs
Time Period நேர அளவு :
Time from நேரம் முதல் : 01.02.2022 Time to நேரம் வரை : காலை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.02.2022 Time நேரம் : 16.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.02.2022 Time நேரம் : 16.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 50 கி.மீ தென்கிழக்கே
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address முகவரி : குண்டடம் பொது பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு மற்றும் கடன் சங்கம் குண்டடம், திருப்பூர் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.சிவக்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கந்தசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49 Years
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation தொழில் : செயலாளர் E-17, தாராபுரம் பொது பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு மற்றும் கடன் சங்கம் லிட், தாராபுரம்
(g) Address முகவரி : 7/21-1, CSI நகர், தாராபுரம், திருப்பூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. மணி, துணை பதிவாளர் (கூட்டுறவு), தாராபுரம் சரகம் திருப்பூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 01/02/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 01.02.2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court 01.02.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. சசிரேகா.
Rank: நிலை காவல் ஆய்வாளர்
இ.த.க. பிரிவு,
திருப்பூர்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 3/2022/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 01.02.2022-ம் தேதி மாலை 16.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது K.சிவக்குமார் வயது 49, செயலாளர், CE-17, தாராபுரம் பொது பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு மற்றும் கடன் சங்கம் லிட், 7/21-1, CSI நகர், தாராபுரம், திருப்பூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் K.சிவக்குமார் வயது 49, செயலாளர், CE-17, தாராபுரம் பொது பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு மற்றும் கடன் சங்கம் லிட், 7/21-1, CSI நகர், தாராபுரம், திருப்பூர். பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம் CE-17, தாராபுரம் பொது பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு மற்றும் கடன் சங்கம் லிமிட்டேட்டில் சங்க செயலாளராக பணிபுரிந்து வருகின்றேன். மேற்படி சங்கத்தின் தலைவராக செந்தில் குமார் என்பவர் உள்ளார். மேற்படி சங்கத்தில் தாராபுரம் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆசிரியர்கள், வருவாய்த்துறை, நகராட்சி, அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு கடன் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி சங்கத்தின் மூலம் கடன் தொகை வாங்கும் அரசு ஊழியர்களுக்கு அந்தந்த துறை அதிகாரிகள் ஊழியர்களின் சம்பளத்தில் அசல், வட்டி மற்றும் சிக்கன சேமிப்பு ஆகியவற்றை பிடித்தம் செய்து மேற்படி சங்கத்திற்கு காசோலையாக ஒவ்வொரு மாதமும் 10-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும். அதன் பின்னர் மேற்படி காசோலையை நான் ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தாராபுரம் கிளையில் செலுத்திவிடுவேன். மேற்படி சங்கத்தில் தாராபுரம் நகராட்சியில் பணிபுரியும் 38 நிரந்தர ஊழியர்கள் கடன் தொகை பெற்றுள்ளனர். அதற்கேற்றவாறு ஒவ்வொரு மாதமும் அவர்களது சம்பளத்தில் பிடித்தம் செய்து மாத தவணை தொகையை சங்கத்தில் கட்டி வருகின்றனர். இந்நிலையில் 2021-ம் வருடம் ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய 5 மாதங்களுக்கு நகராட்சி அலுவலகத்தில் கடன் பெற்ற பணியாளர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்த கடன் தொகை மற்றும் சிக்கன சேமிப்பு ஆகியவற்றை மேற்படி சங்கத்தில் கட்டவில்லை. இது சம்பந்தமாக

நானும் சங்க தலைவரும் நகராட்சி மேலாளர் வெங்கடாசலபதி அவர்களிடம் ஒவ்வொருமாதமும் கேட்டபோது கொரோனா காரணமாக சொத்துவரி, தண்ணீர் வரி வசூலாகவில்லை அடுத்தமாதம் கட்டிவிடுகிறோம் என்று சொல்லி காலம் தாழ்த்தி வந்தார். மேற்படி நகராட்சியிலிருந்து 5 மாதத்திற்கு 38 ஊழியர்களின் கடன் தொகை மற்றும் சிக்கன சேமிப்பாக ரூ.44,04,557/- எங்களது சங்கத்திற்கு நிலுவைத்தொகை கட்ட வேண்டியிருந்தது. இதன் தொடர்ச்சியாக தாராபுரம் நகராட்சி ஆணையர், திருப்பூர் நிர்வாக மண்டல இயக்குனர் மற்றும் சென்னை நிர்வாக மண்டல ஆணையர் ஆகியோருக்கு கடிதம் வைத்தும் இதுவரை மேற்படி தொகையை கட்டவில்லை. 24.11.2021-ம் தேதி வழக்கறிஞர் மூலம் தாராபுரம் நகராட்சி ஆணையர், திருப்பூர் நிர்வாக மண்டல இயக்குனர் மற்றும் சென்னை நிர்வாக மண்டல ஆணையர் ஆகியோருக்கு கடிதம் வைத்து மேற்படி தொகையை கட்ட வலியுறுத்தி சங்கத் தலைவர் நோட்டீஸ் அனுப்பினார். இருந்தும் இதுவரை மேற்படி நகராட்சியிலிருந்து நிலுவை கடன் தொகையை கட்டவில்லை. இந்நிலையில் 24.01.2022 தேதி திருப்பூர் இணை பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நான் தாராபுரம் நகராட்சியிலிருந்து 5 மாதத்திற்கான கடன் நிலுவைத் தொகையை கட்டாத விபரத்தை தெரிவித்தேன். அதற்கு தாராபுரம் சரக துணை பதிவாளர் (கூட்டுறவு) திரு. மணி அவர்கள் சீக்கிரம் வசூல் செய்யுங்கள் என்று சொன்னார். அதன் பின் அவர் 27.01.2022 தேதி மாலை குண்டடம் பொது பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு மற்றும் கடன் சங்கத்திற்கு வந்து தன்னை பார்க்க சொன்னார். நானும் 27.01.2022 தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் குண்டடம் சங்கத்திற்கு சென்று துணை பதிவாளர் திரு. மணி அவர்களைப் பார்த்தேன். அப்போது துணை பதிவாளர் அவர்கள் உன் மேல் நிறைய புகார்கள் வருகிறது, நீ சங்கத்தில் ரூ.44,04,557/- தவணைத் தொகையை சரியாக வசூல் செய்து கட்டாமல் OD யாக உள்ளது. இதனால் சங்கம் நஷ்டத்தில் இயங்கி வருவதால் வங்கியில் இருந்து லோன் பெற முடியவில்லை, உன் மீது 81 என்கொயரி போடப்போகிறேன் என்று கூறினார். அதற்கு நான் நடந்த விபரத்தை கூறி மன்னிப்பு கேட்டேன். அதன் பின் மணி அவர்கள் என் மீது என்கொயரி போடாமலிருக்க தனக்கு பணம் ரூ.2,00,000/- லஞ்சமாக தந்து கவனிக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் தன்னிடம் இல்லை என்றும், சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்போகிறோம் என்றும் என் மீது எந்த தவறும் இல்லை என்றும் நான் சொன்னேன். அதற்கு அவர் நீ ரூ.2,00,000/- கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை தனக்கு ரூ.1,50,000/- கொடு என்று சொன்னார். அதற்கு நான் ஐயா என்னிடம் பணம் இல்லை, சீக்கிரம் வசூல்

செய்து கட்டி விடுகிறேன் என்றும் சொன்னேன். அதற்கு அவர் கேட்காமல் தான் கேட்ட லஞ்ச பணம் ரூ.1,50,000/-த்தை சீக்கிரமாக ரெடி செய்து விட்டு தனக்கு போன் செய்ய சொன்னார். நான் 01.02.2022 தேதி காலை மணி அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டபோது அவர் நாளை பணத்தை ரெடி பண்ணி கொடுத்து விடு என்றும் இல்லையென்றால் மிகவும் வருத்தப்படுவாய் என்று சொல்லியும் போனை வைத்துவிட்டார். இதனால் எனக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டது. எனவே என் மீது 81 என்கொயரி போடாமலிருக்க தாராபுரம் சரக துணை பதிவாளர் (கூட்டுறவு) திரு.மணி அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.1,50,000/- கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx K.Sivakumar 01.02.2022 Sir, Received the complaint on 01.02.2022 at 16.00 hrs and conducted enquiry between 16.00 hrs to 16.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.3/2022/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 at 16.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha) 01.02.2022 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of Tr.K.Sivakumar (49), S/o.Kandasamy, Secretary, CE-17, Dharapuram Public Servants Co-operative Thrift & Credit Society limited, 7/21-1, CSI Nagar, Dharapuram, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

01.02.2022

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.